(ஆ) தமிழ்நாடு நிலமேம்பாடு வாரியம்—மூன்று உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்தின் (Tamil Nadu Land Improvement Board) தேர்தலுக்காக கீழ்க்கண்ட மூவருடைய பெயர்கள் முறைபாக நியமனம் செய்யப்பட்டுள்ளன:

1. திரு. பி. எம். தங்கவேல்ராஜ்
2. திரு. செ. இராமலிங்கம்
3. திரு. கே. ஆர். கணபதி

முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சரியாக இருப்பதால், மேற்கண்ட மூவரும் தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என அறிவிக்கிறேன்.

(இ) வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியம்—உறுப்பினர் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கான தேர்தலுக்கு திரு. கே. குப்புசாமி அவர்களின் பெயர் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளது. முறைப்படி நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளரின் எண்ணிக்கையும், நிரப்பப்படவேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால், திரு. கே. குப்புசாமி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக வாரியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கிறேன்.

(ஈ) மதிப்பீட்டுக் குழு—ஒரு உறுப்பினர் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1980-81 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவில் திரு வி. வால்மீகி அவர்கள் மறைவினால் ஏற்பட்ட ஒரு வெற்றிடத்தை நிரப்பும்பொருட்டு, திரு. எல். இளையபெருமாள் அவர்களின் பெயர் முறையாக நியமனம் செய்யப்பெற்றுள்ளது. முறைப்படி நியமனம் செய்யப் பெறவேண்டிய வேட்பாளரின் எண்ணிக்கையும் நிரப்பப் பெற வேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால், திரு. எல். இளையபெருமாள் இக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.